# ***DEPOSITION OF WITNESS***
# **IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM**

## **CC No.14/2025**

## **PW: 3**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.சந்தானராமன் | Taluk : | தரங்கம்பாடி |
| Father's Name : | திரு.பாலகிருஷ்ணன் | Calling : | LW3 |
| Village : | பொறையார் | Age : | 59 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 22nd day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade II Present. Defence counsel present)

<u>முதல் விசாரணை</u> :

நான் தற்போது பொறையாரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.2 கபிலன் என்பவரை எனக்கு தெரியும். 04.10.2024 அன்று திருவாரூர் கிளையில் 869 என்ற பேருந்தில் நான் நடத்துனராகவும், அ.சா.2 ஓட்டுநராகவும் பணியில் இருந்தபோது பேருந்து திருவாரூரில் இருந்து கும்பகோணம் நோக்கி மதியம் 1.10 மணியளவில் கும்பகோணம் நீலமேகம் மேம்பாலத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தபோது இருச்சக்கர வாகனம் விபத்து ஏற்பட்டு அடிப்பட்ட பிறகு நானும், ஓட்டுநரும் சென்று பார்த்தோம். காயம்பட்ட நபருக்கு அ.சா.2 முதலுதவி செய்து ஆட்டோவில் மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தார். இருச்சக்கர வாகனத்தில் வந்த நபர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று நான் நேரடியாக பார்க்கவில்லை, அதனால் என்னால் விபத்து நடந்த விவரத்தை பற்றி சொல்ல இயலாது என்றால் சரிதான். எங்கள் பேருந்தில் சுமார் 45 பயணிகள் இருந்தார்கள். அதுக்குறித்த ஆவணங்கள் எதையும் போலீசார் என்னிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து எங்கள் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக நிர்வாகம் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பதற்காக ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்வதை தவிர்க்க வேண்டும் என்று தான் முயற்சிப்பார்கள் என்று சொன்னால் சரிதான். எனது முன்விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் சொன்ன விவரத்தை தான் போலீசார் என்னை விசாரித்தபோது கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*